# S.C. No. 204 / 2018

# 05.04.2022

**அ.த.சா. 4, திரு. இராஜா, த/பெ. கோதண்டம், வயது 50**

**சாட்சி**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது மதநந்தப்புரத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது ATM-ல் பாதுகாவலராக பணிபுரிகிறேன். வழக்கு குறித்து எனக்கு எதுவும் ஞாபகம் இல்லை. சுமார் 7 வருடத்திற்கு முன்பு நான் போரூர் விக்னேஷ்வரா நகரில் உள்ள டீக்கடைக்கு சென்று டீ சாப்பிடும் போது கூட்டமாக இருந்தது. போலீசார் அங்கியிருந்தார்கள். ஏதோ கடையில் பிரச்சனை என்று சொன்னார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜர் உள்ள இரண்டாவதாக உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**இந்நிலையில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு வழக்கறிஞர் அனுமதி வேண்டுகிறார். சாட்சியை பரிசீலிக்க அனுமதி வழங்கப்படுகிறது.**

**<u>அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

கடந்த 21.10.2015 அன்று போரூர் விக்னேஷ்வரா நகரில் நானும் அருள் என்பவரும் பேசிக்கொண்டிருக்கும் போது இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார்கள் விசாரித்து கொண்டிருந்தார்கள் என்றும், போலீசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைப்படம் மற்றும் பார்வை மகஜர் என் முன்னிலையில் தயார் செய்தார்கள் என்றும், அதில் நான் இரண்டாவதாக கையெழுத்து செய்தேன் என்றும் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு பவ்வியப்பட்டு அவர்களை காப்பாற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.**